2018 ஜூன் 29]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் மீண்டும் முதலமைச்சராகப் பதவியேற்றபோது, கிராமச் சாலைப் பட்டியலில் 1,03,000 கி.மீ. சாலைகள்தான் இருந்தன. அதற்குப்பிறகு 46,000 கி.மீ. சாலைப் பட்டியலில் சேர்க்கப்பட்டு, இந்தியாவிலேயே ஒரு பெரிய சாதனையாக கிராமச் சாலைகள் எல்லாம் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக 2016-2017 ஆம் ஆண்டில் 55 கோடியே 56 இலட்சம் ரூபாய் மத்திய அரசிடம் ஊக்கத் தொகையாக வாங்கியிருக்கிறோம். 2017-2018-லும், 45 கோடியே 32 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை என தொடர்ந்து இரண்டு வருடங்கள் வாங்கியிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, சிறப்பு சாலைத் திட்டங்கள், நபார்டு திட்டம் என பல்வேறு திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களிலே கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சாலை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 246, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

246—

மீனவர்களுக்கு தங்கும் விடுதி

***8774—திருமதி பி. கீதா ஜீவன்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி தொகுதியில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தில் மீனவர்களுக்கு தங்கும் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2018 ஜூன் 29

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக வளாகத்தில் மீனவர்கள் தங்குவதற்கு, தங்கும் விடுதி அமைத்திட தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகத்திற்கு பரிந்துரைத்து, பொது நிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் பணி 2-12-2017 அன்று துவக்கப்பட்டு 15-7-2018-ல் முடிவுறும். மேற்கூரை, சிமென்ட் பூச்சு மற்றும் சுண்ணாம்பு பூச்சுப் பணிகள் முடிவடைந்துள்ளன. தற்பொழுது இறுதிக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தங்கும் விடுதிக்கான அனைத்துப் பணிகளும் உத்தேசமாக ஜூலை 2018-க்குள் முடிக்கப்பட்டு மீனவர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கும் விடுதி அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதோடு கழிப்பிட வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் மீனவத் தொழிலாளர்களுக்காக செய்து தர வேண்டும். ஏனென்றால், இராமேஸ்வரம், மணப்பாடு, புன்னக்காயல் போன்ற பல்வேறு பகுதிகளிலிருந்தெல்லாம் மீனவத் தொழிலாளர்கள் தொழில் செய்வதற்காக மீன்பிடித் துறைமுகத்திற்கு வருகிறார்கள். அவர்கள் இரவு தங்கியிருக்கும்போது, அவர்களுடைய பொருட்கள் திருடு போகக்கூடிய பாதுகாப்பற்ற ஒரு சூழ்நிலை இருகிறது. ஆகவே, அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கவலைப்படவே தேவையில்லை. அதற்காக அலமாரி 8 கட்டப்படும், குளியல்*

2018 ஜூன் 29]

அறை 4 கட்டப்படும், கழிப்பறை 4 கட்டப்படும், Wash basin 4 வைக்கப்படும். இதில் கிட்டத்தட்ட 180 மீனவர்கள் தங்கி ஓய்வு எடுக்கலாம். ஏற்கெனவே உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில்தான் 12 கோடி ரூபாய் செலவில் மீன்பிடித் துறைமுகம் நவீனப்படுத்தப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு எந்த வசதி கேட்டாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ச்சியாக இப்பொழுதுதான் இரண்டு நாட்களாக விசைப் படகுகள் மீன் பிடிக்கச் செல்லத் தொடங்கியுள்ளன. தொகுதியில், மீன்பிடித் துறைமுகத்திலும் சரி, கடற்கரையிலும் சரி, மீன்பிடித் தொழில், தொடர்ச்சியாக, முறையாக நடைபெற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புக் கவனம் செலுத்தியதன் காரணமாகத்தான் திரேஸ்புரம் மீன்பிடி இறங்குதளம் phase I, phase II, phase III என்று மூன்று இடங்களில் 32 கோடி ரூபாய் செலவில் உங்கள் தொகுதியிலே அமைக்கப்பட்டுள்ளது. எனவே, சிறப்புக் கவனத்தின் அடிப்படையில்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட தமிழக எல்லையான புத்துப்பட்டு முதல் தாளங்காடுகுப்பம் வரையில் தூண்டில் வளைவு ஏற்படுத்தி அந்தப் பகுதி மீனவப் பெருமக்களை இயற்கை இடர்பாடுகளிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று முதல் கூட்டத் தொடரிலேயே கோரிக்கையைச் சமர்ப்பித்தேன். அதற்கான

ஏற்பாடுகள் ஏதாவது நடந்திருக்கின்றதா என்று தெரியவில்லை. மேலும் அப்பகுதியில் 13 மீனவ கிராமங்கள் உள்ளன. 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவப் பெருமக்கள் வாழ்கின்றனர். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மீன்பிடித் தொழிலாளர்கள், மீன் விற்பனையாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் இயற்கை இடர்ப்பாடுகளிலிருந்து காப்பாற்ற வேண்டுமானால், அங்கே தூண்டில் வளைவு அமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக அன்போடு மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல், திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் பகுதியில் அழகன்குப்பத்தை மையமாக வைத்து மீன்பிடித் துறைமுகம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை சமர்ப்பித்தேன். அதனுடைய நிலவரம் என்ன என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகள், குறிப்பாக கழுவேலி, மரக்காணம் பகுதியில் இருக்கின்ற* backwaters, *முகத்துவாரத்தில் நல்ல ஒரு சூழ்நிலையில் துறைமுகம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். 30 ஆயிரம் மீனவர்கள் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் பயன்படுத்திக்கொள்ளும் இடம் என்றும் சொன்னார்கள். நானும் அந்த மாவட்ட அமைச்சர் அவர்களும் அந்த இடத்தை நேரடியாகப் பார்த்து, அதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று இப்பொழுது ஒரு கோடி ரூபாய் செலவு செய்து* DPR-Detailed Project Report *தயாரிப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. விரைவில் அந்த* report *வந்துவிடும். ஏனென்றால் அந்த இடத்தில்* Harbour *மிகவும் அவசியம் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது.* Detailed Project Report *வந்தவுடனேயே, அந்த இடத்திலே ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான நடவடிக்கை நிச்சயமாக அரசின் சார்பில் எடுக்கப்படும்.*

2018 ஜூன் 29]

இரண்டாவதாக தூண்டில் வளைவு பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். பொதுவாக கடல் அரிப்பு என்பது 1,076 கிலோ மீட்டரிலும் high tide, அதாவது கடல் மட்டம் உயரும்போது ஏற்படுகின்ற நிலை. எனவேதான் NIOT என்று சொல்லக்கூடிய National Institute of Ocean Technology நிறுவனம், geosynthetic pipe அதாவது submerged dyke என்று சொல்வார்கள்—அதைக் கண்டறிந்துள்ளார்கள். தூண்டில் வளைவு போடும்போது groynes வெளியே தெரியும். Submerged dyke கடலுக்குள் போடுவதால் மீன்களுக்கு எந்த இடர்பாடும் இருக்காது. அங்கே மீன் வளமும் பெருகும் நிலை உருவாகும். எனவே NIOT கண்டுபிடித்த அந்த technology அங்கே 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அந்த அடிப்படையில், ஏற்கெனவே கடலூர் ஆழிக்குப்பத்தில் ஒரு வருடம் submerged dyke போட்டு, கடற்கரை உருவாகியிருக்கிறது. எனவே அதை experimental basis-ல் எடுத்துக்கொண்டு இப்பொழுது பொம்மையார்பாளையத்தில் அமைப்பதன்மூலம் முழுவதுமாக, அதை model-ஆக வைத்து, விழுப்புரம் மாவட்டத்தில் கடல் அரிப்பு இல்லாத அளவுக்கு எல்லாவித நடவடிக்கைகளும் நிச்சயமாக எடுக்கப்படும்.

மேலும், உறுப்பினர் பக்கத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினருக்கு மேலும் ஒரு நல்ல தகவலாக உங்களுடைய தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் 15 இலட்சம் ரூபாய் செலவில் கூட்டுறவு அங்காடி ஒன்று அமைக்கப்படும். இன்னொன்று, துறைமுகத்தில் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் ஒன்றரை கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். திருப்திதானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

முற்பகல் 10-50

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. 2004 ஆம் ஆண்டு சென்னையை சுனாமி தாக்கியபோது அதிகமாக பாதிக்கப்பட்டது சென்னையிலுள்ள கடலோரப் பகுதியான சீனிவாசபுரம், பட்டினப்பாக்கம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்போது அங்கு வந்து மக்களுக்கு ஆறுதல் அளித்து வரலாறு காணாத அளவுக்கு நிவாரணப் பணிகளை செய்ய பணித்தார்கள். கடல் சீற்றம் அடிக்கடி அதிகம் ஏற்படும்

இடம் பட்டினப்பாக்கம், சீனிவாசபுரம். கடந்த சில நாட்களில், கடல் சீற்றத்தால் கடலோரப் பகுதியில் உள்ள சுமார் 50 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. நானும், தென் சென்னை பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி பாதிப்பினை சீர் செய்ய நடவடிக்கை எடுப்பதற்கு உறுதியளித்தோம். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும், நானும் நேற்று மீண்டும் பட்டினப்பாக்கத்திற்கு சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு, கடலோரப் பகுதியில் வசிக்கும் ஏழை மக்களுக்கு வேறு இடத்தில் வீடு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறினோம்.

மக்களின் இரத்தத்தின் இரத்தமாக மக்களுக்கு சேவையைச் செய்யும் காவல் துறையினரின் இரத்த தான முகாமை சிறப்பித்து, ஏழைகளின் பாதுகாவலராக சிறப்பாகச் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு, யார் வீடு கேட்டாலும் தட்டாமல் ஆணையிடும் துணை முதலமைச்சர் அவர்களோடு ஆலோசித்து மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக* high tide *என்று சொல்லும்போது கடல் மட்டம் உயர்கின்ற நிலை. அந்தமாதிரியான நிலை ஏற்படும்போது அதன் தாக்கம் காரணமாக கடல் அரிப்பு ஏற்படுகின்ற ஒரு நிலை. அது முகத்துவாரத்தை ஒட்டியிருக்கின்ற பகுதி என்கின்ற காரணத்தினால், அங்கு அடிக்கடி கடல் அரிப்பு ஏற்படுகின்ற நிலையில், அந்த முகத்துவாரத்தை ஆழப்படுத்துகின்ற கருத்துரு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அதை ஆழப்படுத்தும்போது கடலரிப்பிலிருந்து அப்பகுதி பாதுகாக்கப்படும். இதற்கிடையில் பாதிக்கப்பட்ட மீன்வர்களை, முதல் நாள் நம்முடைய தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நேரடியாகச் சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டு, அந்த மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள். மறுநாள் நானும், சட்டமன்ற உறுப்பினரும் சென்று பார்த்தோம். அந்த*

2018 ஜூன் 29]

மக்களுடைய கோரிக்கை மாற்று இடம் வேண்டுமென்பதாகும். எனவே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய வீட்டு வசதித் துறையின்மூலம் பெரும்பாக்கம் பகுதியிலேகூட அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்படும் என்ற உறுதியினை அளித்து, அந்த அடிப்படையில் 50 மீனவர்கள் அல்லது எவ்வளவு பேர் இருந்தாலும் அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது. அவர்களும் அதை ஒத்துக்கொண்டார்கள்.

இதற்கிடையில் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்ற நிலையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 10 இலட்சம் ரூபாய் வீதம் Corpus fund-ஐ அம்மா அவர்களுடைய அரசு உருவாக்கி, மாவட்ட ஆட்சித் தலைவருடைய கணக்கில் வைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. கிட்டத்தட்ட 13 மாவட்டங்களுக்கு 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அசாதாரண சூழ்நிலையில் தீ பிடிக்கின்ற நிலை, அதேபோன்று கடல் சீற்றம் காரணமாக குடிசைகள் அடித்துச் செல்லும் நிலை ஏற்படும்போது அந்தப் பணத்தை நாம் உபயோகப்படுத்தலாம். அந்த 10 இலட்சம் ரூபாயிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி தரப்படும் என்று நேற்றே சொல்லி அவர்களும் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

ஆனால், இதற்கிடையில் பட்டினப்பாக்கம் மக்களும் வரவில்லை, எந்த மீனவரும் வரவில்லை. இன்றைக்கு காலையில் சம்பந்தமில்லாமல், யார் தூண்டுதலோ தெரியாது, ஒரேயொரு நண்டை எடுத்துக்கொண்டு ஒரு பெண், முதலில் WhatsApp-ல் message கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு social media-விற்கு message கொடுத்துவிட்டு, என் வீட்டிற்கு வந்தார். அதற்குப் பிறகு media-களெல்லாம் என் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். நண்டு விடுகிறார்களாம் என்று. நண்டுக்கெல்லாம் பயந்தவர்களா நாங்கள். கரடி, பூரான், பல்லி, சிங்கம், புலி மற்றும் காட்டில் இருக்கின்ற அத்தனை மிருகங்களையும் சந்தித்துவிட்டுத்தான் இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறோம். எதற்கும் நாங்கள் பயப்படுகின்ற மாதிரி இல்லை. (குறுக்கீடு) அவர் என்ன சொல்ல வருகிறார் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சாமி, இருக்கையில் உட்கார்ந்துகொண்டு பேசுவதெல்லாம் அவைக் குறிப்பில் வராது. அதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: நான் வனத் துறை அமைச்சராக இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் 2001-லே வனத் துறை அமைச்சராக இருந்தார். அப்போது எங்கள் பெரியகுளம் தொகுதிக்கு வந்தார். பெரியகுளம் தொகுதியிலே கொடைக்கானல் இருந்தது. அப்போதே காட்டு மிருகங்களை வனத்திலே சந்தித்தார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள், நேரமாகிவிட்டது. பதிலை முடியுங்கள்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு வருடங்கள் வனத் துறை அமைச்சராக இருந்தேன். புலி, கரடி, சிங்கம் எல்லாவற்றோடும் வாழ்ந்தவன். இந்த நண்டுகளுக்கெல்லாம் பயப்படமாட்டேன். நண்டோடு வாழ்ந்தவன் நான். அண்ணா நகருக்கும் பட்டினப்பாக்கத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரைக்கும் இப்போது எல்லாமே fashion ஆகப் போய்விட்டது. சமூக ஆர்வலர் என்கிற போர்வையில் செய்தித் துறை மற்ற media-க்கு தகவல் கொடுத்துவிட்டு, ஒரு கொசு அல்லது ஈயோடு வந்து, ஒரு photo எடுத்துக்கொண்டு தங்களை விளம்பரப்படுத்திக்கொள்கிறார்கள். ** என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றுமில்லை உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன் இருங்கள். வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 ஜூன் 29]

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கூறிய வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். (குறுக்கீடு) ஏனென்றால், ** மாண்புமிகு அமைச்சர் ஒரு பகிரங்கமான குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களே அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கக் கோருவார்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறிய அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) வினா வரிசை எண் 247, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

247—

கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***20695—திரு. த. மனோ தங்கராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, திக்கணங்கோட்டில் உள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி, திக்கணங்கோடு கிராமத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. அரசு விதிகளின்படி, கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமானால், அங்கு தினசரி கால்நடைகளின் வருகை 40-க்குமேல் இருக்க வேண்டும் என அரசு விதிகளில் உள்ளது. அதேபோல, உள் நோயாளி பிரிவு, ஊடுகதிர் இயந்திரம்

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*